REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

## பாக். ஒரு இஸ்லாமிய நாடல்ல?

"குரான் கொள்கைகளை அடிப்படையாக வைத்து எந்த நாட்டிலாவது கடந்த 13 இஸ்லாமிய நூற்றாண்டுகளாக, அரசியல் சட்டம் அமைக்கப்பட்டது உண்டா? வேறெங்கும், எந்தக் காலத்திலும் ஒரு இஸ்லாமிய ராஜ்யம் இல்லாதபோது, நாம் இங்கு பாகிஸ்தானிற்கு எப்படி ஒரு இஸ்லாமிய அரசியல் சட்டத்தை உருவாக்க முடியும்? அதுவும் இந்த நாட்களில்?"—இவ்வாறு பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரி மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா, 'பாகிஸ்தானின் அரசியல் சட்டம் மதச் சார்பற்றதாகவா அல்லது இஸ்லாமிய அரசியல் சட்டமாகவா இருக்கும்?' என பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்குப் பதிலளித்தார்.

(குறிப்பு:—பாகிஸ்தான் ஒரு இஸ்லாமியக் குடியரசாகும் என முன்பு அரசியல் நிர்ணய சபையில் பேசப்பட்டது நினைவிலிருக்கலாம்.—ஆ-ர்)

மலர் 2] சென்னை: கார்த்திகை 3உ வியாழன் (18—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 4உ வெள்ளி (19—11—54) [இதழ் 135

# சட்டசபை முன் உழவர் ஆர்ப்பாட்டம்

## வி. பி. நிலவரி சட்டத்தை வாபஸ் பெற வற்புறுத்தல்

### உழவர்களைக் கலைக்கப் போலீஸ் தடியடி

ரீவா, நவ. 16—

விந்தியப் பிரதேச சட்டசபைக் கூட்டம் நிகழ்ந்து கொண்டு இருக்கும்பொழுது, ஏறத்தாழ 10,000 உழவர்கள் சபை கட்டிடத்தின் முன் கூடிக்கொண்டு, ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தடியடிப் பிரயோகம் செய்து உழவர்கள் கூட்டம் கலைக்கப்பட்டது. அதில் 30 உழவர்கள் காயமுற்றனர் எனத் தெரிய வருகிறது.

அங்கு நிறைவேற்றப்பட்டுள்ள நிலவரிச் சட்டமானது, நிலமற்ற உழவர்களின் நலன்களைப் பாதிப்பதாக இருக்கிறதாம். அதை வாபஸ் பெற வேண்டுமென்பதே உழவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கான காரணம்.

## தஞ்சையில் கலைக் கல்லூரி அமைக்க...

### திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ரூ. 60,000 தருகிறார்!

குடந்தை, நவ. 15—

தஞ்சையில் நிறுவப்பட இருக்கும் கலைக் கல்லூரிக்கு நன்கொடையாக திருவாவடுதுறை ஆதீன கர்த்தரான திரு. சுப்ரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீனத்திலிருந்து ரூ. 50,000-மும், திருவிடமருதூர் கோவில் நிதியிலிருந்து ரூ. 10,000-மும் தந்துள்ளார் எனத் தெரிகிறது.

## கல்லக்குடி-தூத்துக்குடி: உயிர்நீத்த தோழர்கள் குடும்பங்களுக்கு 'அன்பு காணிக்கை'

### கோபி கழகத் தோழர்களின் பெரு முயற்சி

### பொதுச் செயலாளர் அண்ணாதுரையிடம் நிதியளிப்பு

15—11—54 மாலை 6-30 மணிக்கு, ரேடியோ திடலில் தோழர் கே. பி. துரை தலைமையில், தி.மு.கழகச் சார்பில், தி.மு.க. அறப்போரின்போது, கல்லக்குடி—தூத்துக்குடியில் உயிர் நீத்த தோழர்களின் குடும்பங்களுக்கு 'அன்புக் காணிக்கை' வழங்கும் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார், சி. வி. ராசகோபால், கே. ஆர். ராமசாமி, ஈ. வெ. கி. சம்பத், அண்ணா ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டு தி. மு. கழகத்தின் கொள்கைகளையும், மும்முனைப் போராட்ட வெற்றி குறித்தும், திராவிடத்தின் சமூக, பொருளாதார, அரசியல் விடுதலை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

திராவிட நாட்டுப் பிரிவினை மூலம்தான் திராவிட இனத்தவரின் வறுமை, பிணி, பஞ்சம் ஆகியவை நீங்கி சுகவாழ்வு பெறமுடியுமென்பதையும், வடநாட்டவர் தென்னாட்டவரை அடிமைகளாக்கி அவர்களைப் படுகுழியில் பிடித்துத் தள்ளி, மீண்டும் அவர்கள் முன்னேற்றமடைய விடாதபடி ஆட்சி பீடத்திலிருக்கும் வடநாட்டுச் சர்க்கார் செய்துவரும் அநீதிகளை விளக்கியும், தென்னாட்டு விவசாயிகள் படுந் துயரம், நெசவுத் தொழிலாளர் படுந் தொல்லைகள் இவைகளைத் தெரிந்துகொள்ள கவலைப்படாத நேரு சர்க்கார், வடநாட்டு ஆலை முதலாளிகளையும், கோடிக்கணக்கான சொத்துக்கள் உள்ள அதிபர்களையும் மேலும் கொழுக்க வைத்து ஆதிக்கம்பெறவே முயற்சி செய்கிறதென்பதை எடுத்துக் காட்டியும், திராவிட மக்கள் வாழ்க்கை வளமெய்தாமல், மதம் கடவுள், மோட்சம் ஆகியவற்றின் பெயரால் தங்களது நேரத்தையும், அறிவையும் வீணாக்கி வருவதையும் எடுத்துக் கூறி, இந்நிலைகள் யாவும் மாற்றம் காண, திராவிட நாடு பிரிந்து, தனியரசு ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதையும் விளக்கிப் பேசினார்கள்.

பின்னர், மும்முனைப் போராட்டத்தின்போது உயிர் நீத்த தூத்துக்குடி, கல்லக்குடி தோழர்களின் குடும்ப நிதிக்கு, பொதுச்செயலாளர் அண்ணாதுரையிடம், கோபி நகர தி. மு. கழகச் சார்பில் ரூ. 101 கொண்ட பணமுடிப்பும், புளியம்பட்டி தி. மு. கழகச் சார்பில் ரூ. 13-ம், கோபி தையல் தொழிலாளர் சார்பில் 201 காலணாக்கள் கொண்ட முடிப்பும், காட்டிப்பாளையம் தி. மு. க. அபிமானிகள் சார்பில், 1,001 காலணா முடிப்பும், கல்லக் கவுண்டன் பாளையம் தி. மு. கழகச் சார்பில் 201 காலணா முடிப்பும் நன்கொடை அளிக்கப்பட்டது.

பல கழகங்கள் சார்பில் பொதுச் செயலாளருக்கும், தோழர்களுக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப் பெற்றன.

கூட்ட முடிவில் தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் 'எங்கே சொர்க்கம்' என்ற பாடலைப் பாடினார்.

## கிரிமினல் சட்ட திருத்த மசோதா

### காங்கிரஸ்காரர்களிடையேயும் எதிர்ப்பு!

கிரிமினல் சட்டத்திற்கான திருத்தங்களை தனிக் குழு ஒன்று செய்துள்ள சிபாரிசுப்படி மசோதாவாக உள்நாட்டு மந்திரி கட்ஜு, மக்கள் சபையில் கொண்டுவந்துள்ளாரல்லவா? அதற்கு காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கூட பலத்த எதிர்ப்பு தோன்றியிருக்கிறதாம்.

பண்டித தாக்கூர்தாஸ் பர்காவா என்ற காங்கிரஸ் உறுப்பினர், மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சட்ட முறைகள் முழுவதையுமே மாற்றுவதானால் நான் ஒப்புக்கொள்ள முடியும்; ஆனால், அதற்கு நீங்கள் தயாராக இல்லாவிடின் இப்போதுள்ள சட்டங்களையே தொடர்ந்து அமுல் செய்யுங்கள்; நீங்கள், இப்போது சட்ட முறைக்கான இலக்கணத்தையே மாற்றுகிறீர்கள்," என்றார்.

## நந்திகொண்டா அணைக்கட்டுத் திட்டம்

### ரூ. 75 கோடி செலவாகுமென மதிப்பு

"கிருஷ்ணா நதியில் அமையும் நந்திகொண்டா அணைக்கட்டுத் திட்டத்திற்கு சுமார் ரூ. 75 கோடி செலவாகும்; கட்டிமுடிக்க 10 ஆண்டுகளாகும்," என்று திட்டக் குழுவின் தொழில் நுட்பக் குழு கணக்கிட்டு, சிபாரிசும் செய்துள்ளதாம்.

இந்த அணைக்கட்டு பூர்த்தியானால் சுமார் 21,40,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமெனக் கூறப்படுகிறது.

திட்டக் குழுவின் அறிக்கை மக்கள் சபையில் விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாம்.

## நகீபின் அதிகாரம் மந்திரிசபைக்கு!

எகிப்திய ஜனாதிபதியின் எல்லா அதிகாரங்களையும் இனி மந்திரி சபையே பெற்று விளங்குமாம்!

## கடல்கடந்த சீக்கியர்களின் மதவெறி!

### "மற்ற 'இந்தியர்'களிலும் நாங்கள் மாறுபட்டவர்கள்!"

#### அவருக்கும் 'சீட்டு?'

கராச்சியிலிருந்து லண்டன் டெய்லி டெலிகிராப்' என்ற பத்திரிகையின் நிருபர் ஒருவரின் கூற்றுப்படி, "அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்குப் பொருளாதார, இராணுவ உதவிகள் கிடைத்ததும், முகம்மது அலிக்கும் பிரதமர் பதவியிலிருந்து சீட்டுக் கிழியும்" என்று கருதப்படுகிறது.

#### அரசியலில் தனிப் பிரதிநிதித்துவக் கோரிக்கை

##### கெனியா இந்திய காங்கிரசில் நெருக்கடி

பிரிட்டனின் கண்காணிப்பில் உள்ள கெனியாவில், ஆயிரக் கணக்கான 'இந்தியர்'கள் குடியேறி உள்ளனர். அங்குள்ள இந்திய முஸ்லிம்களுக்குத் தனித் தேர்தல் உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது. அதன்படி, முஸ்லிம் மக்கள், தங்கள் மதத்தைச் சேர்ந்த ஒருவரையே பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

இதைக் கண்ட சீக்கியர்களும், தங்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவ முறை வேண்டும் எனக் கோருகின்றனர். அங்கு வசித்துவரும் மற்ற 'இந்தியர்'களிலும், தாங்கள் மாறுபட்டவர்கள் எனக் காரணம் கூறி, முஸ்லிம்களைப் போன்றே தங்களுக்கும் தனித் தேர்தல் முறை வேண்டும் எனக் கூறுகின்றனர். தங்கள் தனித் தேர்தல் கோரிக்கையை, கவர்னரிடம் சீக்கியர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சீக்கியர்கள் தனித் தேர்தல் உரிமையைப் பெற்றபோதி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

## பொதுசெயலாளர் அண்ணாதுரைக்கு கோபி நகராட்சி மன்ற வரவேற்பு

15—11—54 மாலை 5-30 மணியளவுக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கும், சென்னை முன்னாள் மேயர் டி. செங்கல்வராயன் அவர்களுக்கும், கோபி நகராட்சி மன்றத்தார் வரவேற்பளித்தனர்.

நகராட்சி மன்றத் தலைவர் ஜி. எஸ்.லட்சுமணன் அவர்கள், மன்றச் சார்பில் அண்ணாவையும், செங்கல்வராயனையும் வரவேற்று இருவருக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்து, மலர்மாலைகள் அணிவித்தார்.

தங்களுக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் பேசுகையில், ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அமைச்சர்களுக்கு மட்டுமே வரவேற்பும், உபசாரங்களும் செய்து தங்கள் தேவைகளையும் குறைகளையும் கூறிவரும் வழக்கத்திற்கு மாறாக, பொதுநல ஊழியத்திலிருக்கும் தங்களுக்கு—அதிலும் கருத்துவேற்றுமை கொண்ட இருவருக்கும்—அதிகார ஆட்சிப் பீடத்தில் இல்லாத தங்களுக்கு—கோபி நகராட்சி மன்றம் வரவேற்பளிப்பது, ஜனநாயக முறை அலட்சியப் படுத்தப்பட்டு வருகிற இந்தக் காலத்தில், ஜனநாயகம் கொலை செய்யப்படாமல் பாதுகாக்கவும், மாற்றுக் கருத்துடையோரையும் மதித்து நடக்கும் நற்பண்பு வளரவும் வழிகோலுவதாகும் என்று இருவரும் தத்தம் உரைகளின் போது குறிப்பிட்டனர். அவர்கள், மேலும் சட்ட சபைகளில் வீற்றிருப்பதைக் காட்டிலும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களில் அங்கம் வகிப்போருக்கே அதிகப் பொறுப்புணர்ச்சியும், திறமையும் நேர்மையும், வாக்குறுதிகளை நிறைவேற்றும் உயர்ந்த பண்பும் வளர இடமிருக்கிறது என்று குறிப்பிட்டு விட்டு, குறைந்த வரிப் பணத்தையும், குறைந்த அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு நகர மக்கட்கு நல்ல பணியாற்றிவரும் நகராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள், கமிஷனர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

## போலீசார் மீது கல்லெறிந்த எம். எல். ஏ.

### 18 மாத கடுங்காவல் தண்டனை பெற்றார்

பாடியாலாவில், 'பதேகார் சாகிப் கலவர' வழக்கு' என்றழைக்கப்படும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஆத்மசிங் என்ற ஐக்கிய முன்னணி எம். எல். ஏ.-வுக்கும், மற்றும் ஐவருக்கும் 18 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் எல்லோரும் கடந்த டிசம்பர் 27-ந் தேதியன்று பிரதம மந்திரி பண்டித நேரு பதேகாருக்கு வந்திருந்தபோது, போலீஸ்காரர்கள் மீது கல்லெறிந்து குழப்பம் விளைவித்துக் கலகம் செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தனராம்.

இவர்கள் செய்த கலகத்தினால் சுமார் 12 போலீசாருக்குக் காயங்கள் ஏற்பட்டனவாம்.

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 18—11—1954 வியாழன்


# குழப்பத்தைத் தொடர்ந்து குழப்பம்

மக்கள் நலங் கருதாது, வெறும் காமக் களியாட்டத்தில் காலங் கழித்துக் கிடந்த பரூக் மன்னனை, எகிப்து போர்ப்படை உயர் அதிகாரிகளில் சிலர் விரட்டியடித்தனர். ஆட்சியும் அவர்கள் பிடியில் சிக்கியது.

பரூகின் வழி ஆடிக்கிடந்த அரசியல் கட்சிகளின் பேயாட்டத்திற்கும், போர்ப்படையினர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். அதன் தலைவர்கள் சிலரின் பொருட்களைப் பறிமுதல் செய்தும், தண்டித்தும் அரசியல் ஒழுங்கீனத்திற்கு நல்லறிவு புகட்டினர் அப்புரட்சிக் குழுவினர்.

வளங் குன்றிக் கிடந்த எகிப்து மக்கள், மதோன்மத்தனை பரூக் தொலைந்ததற்குக் கண்கலங்கவில்லை; மாருக மகிழ்ந்தனர்; அவன் ஒழிக்கப்பட்ட நாளை எகிப்தின் விடுதலை நாளாகவும் கருதிக் கொண்டாடினர்.

நேர்மையும், நியாயமும் தெரியாது நடந்துகொண்ட அரசியல் கட்சிகள், நிர்மூலமாக்கப்பட்டதற்கும் மக்கள் வருந்தவில்லை. அச்செயலைப் பாராட்டி, அதைச் செய்து முடித்த போர்ப்படை புரட்சிக் குழுவை வாழ்த்தி வரவேற்றனர்.

பரூக் மன்னன் வீழ்ச்சியோடும், அரசியல் கட்சிகள் மறைந்ததோடும், எகிப்து நாட்டின் புதிய வரலாறு தொடங்கியது. புதிய வரலாற்றை உருவாக்கும் பொறுப்பை போர்ப்படையினர் புரட்சிக் குழு ஏற்றுக் கொண்டது. அத்துடன் மேற்படி புரட்சிக் குழு வரலாற்றின் சிறப்புக்குரிய முதற் கட்டமும் வெற்றிகரமாக முற்றுப் பெற்றுவிட்டது.

புரட்சிக் குழுவின் நோக்கம், விழுமியது; போக்கு, புது வாழ்வை உருவாக்கக் கூடியது; குறிக்கோள், எகிப்து அரசியலில் ஒழுக்கம், நேர்மை, திறமை ஆகிய உயர் பண்புகள் அனைத்தையும் புகுத்தக் கூடியது. இவ்வளவையும் செய்து முடித்தாகவேண்டும் எனப் புரட்சிக் குழு சூளுரைத்துக் கொண்டிருந்தது.

போர்ப்படை புரட்சிக் குழுவில் மதி மிகுந்தவர்களும், செயல் வீரர்களும், நெஞ்சுரம் படைத்தவர்களுமாக சிலர் இருந்த போதிலும், ஆட்சிப் பொறுப்பின் தலைவராக தளபதி நஜீப் அமர்த்தப்பட்டார். அப்பதவிக்கான ஆற்றல் அப்பொழுது அவருக்கு இருந்ததா இல்லையா என்ற ஆராய்ச்சி அவசியமற்றது.

எகிப்து ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் புரட்சிக் குழுத் தலைவரான நஜீபுக்கும், மற்ற புரட்சிக் குழு உறுப்பினர்களுக்கும் இருந்துவந்த உறவு முறையில் கீறல் தோன்றத் தொடங்கியது. கொள்கை அடிப்படையிலா அல்லது அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வதிலா அந்தக் கீறல் தென்பட்டது என்பது ஆராயத் தக்கது. அங்கு, பின்னர் நிகழ்ந்த அரசியல் குழப்பம், நஜீபுக்கும், மற்ற புரட்சிக் குழுவினருக்கும் ஏற்பட்டப் பிணக்கின் தன்மையை, ஒளிவு மறைவு இல்லாமல் உலகுக்கு உணர்த்திவிட்டது.

அவர்களிடை ஏற்பட்ட மனக் கசப்பிற்கு, தலைவர் நஜீபுக்குள்ள அதிகாரத்தையும், அமைச்சர் குழுவிற்குள்ள அதிகாரத்தையும் வரையறுப்பதில்தான் ஏற்பட்டது என்பது விளக்கமாயிற்று. அதிகாரம் அனைத்தும் தமக்கே வேண்டும் என்றார் நஜீப். தலைவரின் அதிகாரத்திற்கு வரம்பு கட்டவேண்டும் என்றனர் புரட்சிக் குழுவினர். நஜீபின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியைத் தீவிரமாக மேற்கொண்டவர் இன்று எகிப்தின் பிரதமராக உள்ள கர்னல் அப்துல் நாசெர்ஆவார். எனவே, அதிகாரம் முழுதும் அப்துல் நாசெர் கையிலா, தலைவர் நஜீப் கையிலா என்ற அதிகாரப் போட்டி எகிப்து அரசியலில் இடம் பெற்றுவிட்டது.

தலைவர் நஜீப் இடமும், கர்னல் நாசெர் இடமும் மூண்டுவிட்ட அதிகாரப் போட்டி, ஒருவரை ஒருவர் கவிழ்த்துவிட்டால்தான் கோரிய அதிகாரத்தைப் பெற முடியும் என்ற நிலைமையை எகிப்தில் உண்டாக்கிவிட்டது. எனவே, வெளிப்படையாகவும், திரை மறைவிலும் ஒருவருக்கு எதிராக ஒருவர் சதி செய்வதில் வந்து முடிந்தது.

புரட்சிக் குழுவைச் சேர்ந்த இருவரிடை ஏற்பட்ட அதிகாரப் போட்டியின் விளைவாக, புரட்சிக் குழுவின் ஆரம்பக் கோட்பாடு மறைந்து ஒழிந்தது. அதாவது, எகிப்து அரசியல் வாழ்வில் அறநெறியைப் புகுத்த வேண்டும் என்ற புரட்சிக் குழுவின் ஆரம்ப சூளுரை, தலைவர்கள் இருவரிடை மூண்டுள்ள அதிகாரப் போட்டியால் அழிந்தேபோயிற்று. அதற்கு பதிலாக அதிகார வெறிக்குப் புரட்சிக் குழு பலியாகிவிட்டது.

கடந்த பிப்ரவரித் திங்களில் தலைவர் நஜீபை விரட்டிவிட பிரதமர் அப்துல் நாசெர் முயற்சித்தார்; முயற்சியில் அவருக்கு ஓரளவு வெற்றியும் கிடைத்தது. ஆனல் எகிப்து மக்களிடம் நாசெருக்கு இருந்த செல்வாக்கைக் காட்டிலும், நஜீபுக்குக் கொஞ்சம் கூடுதலான செல்வாக்கு. எனவே, நஜீபை வீழ்த்த நாசெர் எடுத்த முயற்சி முழு வெற்றிபெறவில்லை. அதுவுமன்றி சூடான் எதிர்காலத்தைக் குறித்துத் தீர்மானிக்கும் சூடான் தேர்தல் விவகாரமும், நஜீபை விரட்ட நாசெர் எடுத்துக்கொண்ட முயற்சிக்குத் தோல்வியைக் கொடுத்தது.

நஜீப், சூடான் குடிமகன். சூடானின் எதிர்காலத்தை நிர்ணயிக்க நடைபெறும் தேர்தல் முடிவு எகிப்துக்கு எதிராகப் போய்விடாமல் தடுக்க வேண்டுமானல், நஜீபை விரட்டும் முயற்சியை கைவிட்டால்தான் நிறைவேறும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமை நஜீபையே மீண்டும் எகிப்து ஆட்சியின் தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தை பிரதமர் நாசெருக்கு உண்டாக்கியது.

அந்த நேரத்தில் சவூதி அரேபிய மன்னரும் எகிப்தில் இருந்தார். அவர் இரு தலைவர்களிடத்திலும் தூது சென்று சமரசத்தை உண்டாக்கினர். நஜீப் தலைவர் பதவியும் நிலைத்தது.

முன்போல் நஜீப் தலைவராக்கப்பட்டபோதிலும், அவரிடம் முன்னல் ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகாரத்தை எல்லாம், சிறுகச்சிறுக புரட்சிக் குழு பறித்துவிட்டது. அவரை வெறும் பதுமையாக்கிவிட்டது புரட்சிக் குழு.

அப்பொழுது பிரதமர் நாசெருக்கும், தலைவர் நஜீப்புக்கும் மூண்ட பகை, கடந்த ஞாயிறில்தான் முடிவுற்றது. நஜீப் விரட்டப்பட்டார். பிற நாடுகளுக்குச் சென்று விடவும் அவருக்கு அனுமதி கிடையாது. அதாவது, அவர், பிரதமர் நாசெரால் காவலில் வைக்கப்பட்டிருக்கிறர் என்பதுதான் அதற்குப் பொருள்.

பிரதமர் நாசெரைக் கொல்ல, முஸ்லீம் சகோரத்துவ சங்கத்தைச் சார்ந்த ஒருவன் முயற்சித்தான். அந்த முயற்சி தோற்றது. நாசெர் தப்பிப் பிழைத்தார்.

அதை ஒரு புகலாகவோ அல்லது உண்மைக் காரணமாகவோ கொண்டு, நாசெரைக் கொல்லும் முயற்சியில், தலைவர் நஜீபுக்கு பங்கு உண்டு எனக் காரணங்காட்டி, அவரைப் பதவியிலிருந்து விரட்டிவிட்டார் நாசெர். முன்முறை நஜீப் வெளியேற்றப்பட்டகாலை எகிப்து மக்கள் புரட்சிக் குழுவினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யக் கிளம்பியது போல், இந்த முறை எகிப்து மக்கள் கிளம்பவில்லை. பொது மக்களிடை நஜீபுக்கு இருந்துவந்த பற்றுதல் தேய்ந்துவிட்டதுதான் இந்த அமைதிக்குக் காரணமோ அல்லது புரட்சிக் குழுவினர் தீவிர அடக்குமுறைதான் காரணமோ? எகிப்து மக்களின் அமைதிக்கு எது காரணமாக இருந்தபோதிலும், அவர்கள் எதிர்பார்த்தபடி புரட்சிக் குழு, இதுவரைதனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வதில்தான், புரட்சிக் குழு காலத்தைக் கழித்து வருகிறது என்ற வேதனை தரும் உண்மை, எகிப்து மக்களிடம் அரசியல் சலிப்பை உண்டாக்கி இருந்தாலும் இருக்கக்கூடும். எகிப்து மக்களின் இந்த அமைதி, எகிப்து அரசியலில் புரட்சிகரமான மாற்றத்தைத் தோற்றுவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சூடான் மாணவர்கள், நஜீபை விரட்டினதற்கு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். கண்ணீர்ப் புகை விட்டு மாணவர் கூட்டம் கலைக்கப்பட்டும் இருக்கிறது. அந்நாட்டு அரசியல் தலைவர்களும், நாசெர் போக்கைக் கண்டிக்கின்றனர்.

பரூக் மன்னனைத் தொலைப்பதில் புரட்சிக்குழுவின் செயல் ஒரு பெரும் புரட்சியாகத்தான் இருந்தது. இப்பொழுது அதன் நடைமுறை குழப்பத்தைத் தொடர்ந்து குழப்பத்தை உருவாக்குவதாகவே இருக்கிறது. வருந்தத்தக்க நிலை!

# சென்னையில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி

## பயன் குறித்து வடநாட்டவர் கருத்து

கல்கத்தா, நவ. 16—

“சென்னையில் கிடைக்கிற ‘லிக்னைட்’ தோண்டி எடுக்கப்பட்டால் அது, தென்னிந்தியாவின் எரி பொருள் தேவையை வெகுவாகக் குறைக்கும். இன்றுள்ள நிலையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் தோன்றக்கூடும்; மேற்கு பாகிஸ்தானில் ‘சூய்’ எனுமிடத்தில் கிடைக்கிற இயற்கையான எரி வாயு எவ்வளவு அங்கு உபயோகப்படுகிறதோ, அவ்வளவு, தென்னிந்தியாவிற்கு உபயோகப்படும்.

“நிலக்கரி உபயோகிப்பவர்களின் கஷ்டங்களில், முதலாவது, உயர்ந்த ரக நிலக்கரியின் விலைப்படி குறைந்தரக நிலக்கரி விநியோகிக்கப்படுகிறது; இரண்டாவது கஷ்டம், தனக்குக் கிடைக்கிற நிலக்கரியின் நிறையில் நிலக்கரி வாங்குபவன் ஏமாற்றப்படுகிறன். இதற்குக் காரணம், சில நியாய மனப்பாங்கற்ற உற்பத்தியாளர்களும், நிலக்கரியை நிறுத்து அனுப்பும் உத்தியோகஸ்தர்களின் பொறுப்பற்ற தன்மையுமேயாகும்,”

—என்று, நிலக்கரி உபயோகிப்போர் சங்கத்தின் 9-வது வருடாந்திரக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய தாரபகார் கேர்ஜிடிரைவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னர்:—

“நிலக்கரித் தொழில் பற்றி பலப்பட பேசப்படுகிறது என்றாலும், எவ்வித முன்னேற்றமும் ஏற்படக் காணும்.

“நிலக்கரி உற்பத்தியாகும் இடத்திலிருந்து உபயோகிக்கப்படும் நாட்டின் பல பாகங்களுக்கும் நிலக்கரியை கொண்டு செல்வதற்கான இரயில் ‘வாகன்’ வசதிகள் போதுமானதாக இல்லை.”

## சுங்க வரி விதிப்பு ரத்து

ஒரு நடை மட்டும் உண்டு

இந்திய யூனியனிலிருந்து, காரைக்காலுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு வந்த பொருள்கள்மீது இருந்துவந்த சுங்க வரிக் கட்டுப்பாடுகள் யாவும் ரத்து செய்யப்பட்டு விட்டமையால், இனிமேல், அவ்வாறு கொண்டு செல்லப்படும் பொருட்களை சுங்கச் சாவடிகளில் சோதிக்கப்படுவதற்காகக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

ஆனல், சுங்க வரி செலுத்தப்படாத சில பொருட்கள் இன்னும் காரைக்காலில் இருப்பதால், அவற்றை, காரைக்காலை விட்டு வெளியே எடுத்துச் செல்பவர்கள், சுங்கச் சாவடிகளில் அவைகளை சோதிக்கப்பட ஒப்படைக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

காரைக்கால் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டதிலிருந்து, அப்பகுதிக்குப் பல்வேறு வசதிகள் விரிவாக்கப்பட்டு வருகிறதாகத் தெரிய வருகிறது.

## எகிப்திய நெருக்கடி

சூயஸ் பற்றிய ஒப்பந்தமே காரணம்: பிரிட்டிஷார் யூகம்

பிரிட்டிஷ்—எகிப்து ஆகியவற்றிற்கிடையே, சூயஸ் கால்வாய் பற்றி ஏற்பட்ட உடன்பாட்டினல் உருவான கருத்து வேற்றுமைகளால்தான் எகிப்திய ஜனதிபதி நகீப், பதவியிலிருந்து விலக்கப்பட்டார் என்பதாக லண்டனிலுள்ள ராஜதந்திரிகள் பலர் கருதிக்கொள்வதாகத் தெரிகிறது.

எகிப்து நாட்டுப் பிரதமர் நாசர் செய்துகொண்ட அவ்வொப்பந்தம் பிரிட்டனுக்குச் சாதகமாயிருப்பதாகக் கூறி, அதை நகீப் ஆட்சேபித்திருக்கிறர். அவ்வொப்பந்தத்தை எகிப்து முஸ்லிம் சகோதரக் கழகமும் எதிர்த்து வந்திருக்கிறது.

அவ்வொப்பந்தம் அங்கீகரிக்கப்பட வேண்டிய காலம் சமீபித்துவிட்டதால் நகீப் வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றனராம்.

# “பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதென்பது சரியல்ல!”

## “வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ளது”

“ஐந்தாண்டுத் திட்ட அமுலில், மூன்ருண்டுகளின் இறுதியில் இந்தியாவின் பொருளாதாரத் துறையில் குறிப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்றும், பொருளாதார அமைப்பு நிலைபெற்றுள்ளதென்றும் திட்டக் கமிஷன் கூறுகிறது; இக்கருத்தை பலர் உண்மை என்றும் கருதுகிருர்கள்; அதே நேரத்தில் ஆய்வுக் கண்ணேட்டத்துடன் நோக்கினல், நிலைமை திருப்திகரமானதாக இல்லை என்று கூறமுடியும்,”

—என்று, கல்கத்தா பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஜே. சி. கோஷ் இந்தியப் பொருளாதாரக் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

“எல்லோருக்கும் வேலை கொடுக்கும் கொள்கையில், இந்தியா எவ்வளவோ தூரம் பிற்போக்கிலேயே இருக்கிறது. தற்கால இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி தனி மனிதனின் வருவாயை அதிகரிக்க வேண்டிய காரியங்களில் இந்தியா இன்னும் போதுமான அளவு ஈடுபடவில்லை. ஆண்டு ஒன்றுக்கு தனி மனிதனின் சராசரி வருமானம் ரூ. 260 என்பது, அவனது தேவைகள் போதுமான அளவு பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையே குறிக்கிறது,”

என்று அவர் மேலும் பேசினர்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“இந்தியாவில் 80 சதவிகித மக்கள் விவசாயிகள்; அவர்களது வலிவெல்லாம், மனித வலிவுதான். அமெரிக்காவில், 15 சதவிகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள். ஆனல்; அவர்கள் நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்யவில்லை; வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும்உற்பத்திசெய்கிருர்கள்.”

# "பேச்சுரிமை, ஜனநாயகம் இவற்றில் கம்யூனிஸ்டுகளுக்கு நம்பிக்கை கிடையாது"

டாக்டர் நாகியின் குற்றச்சாட்டு

"கம்யூனிஸ்டுகளுக்கு பேச்சுரிமை, ஜனநாயகம் இவற்றிலெல்லாம் நம்பிக்கை கிடையாது; தனி நபர் சுதந்திரம், விவசாயிகள்-உடமை இவைகளையும் கம்யூனிஸ்டுகள் நம்புவதில்லை. 'மக்கள் ஜனநாயகம்' என்பது, மக்களைத் தவறான பாதையில் இழுத்துச் செல்வதற்காகக் கூறப்படும் ஒரு 'கோஷம்'—அவ்வளவுதான்,"

—என்று ஹங்கேரி நாட்டு முன்னாள் பிரதமர் டாக்டர் நாகி குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் நாகி இப்போது இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார்.

சென்னையிலிருந்து பாலா வந்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"விவசாயிகளுக்கு மிகப் பெரிய எதிரிகள் கம்யூனிஸ்டுகள். இந்திய விவசாயிகள் கம்யூனிஸ்டுகளின் குரலுக்குச் செவி மடுக்கக் கூடாது; ஜனநாயக ரீதியான விவசாய நிறுவனங்களை பலப்படுத்த வேண்டும்."

## நிலச் சீர்திருத்தம்

நடைபெறவிருக்கும் சென்னை சட்டசபையின் 'பட்ஜெட்' கூட்டத்தில், நிலச் சீர்திருத்தம் பற்றிய மசோதா கொண்டுவரப்படமாட்டாது என்று தெரிய வருகிறது.

இந்தியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில், நிலக்கரி உற்பத்தி 1954 ஆகஸ்ட் மாதத்தில் சுமார் 29,57,619 டன்னாக இருந்தது, 1954 செப்டம்பர் மாதத்தில் 31,71,404 டன்னாக அதிகரித்துள்ளது.

# மாநிலத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக தேர்தல்

## பதிவான வாக்குகள் பற்றிய விபரங்கள்

சென்னை மாநிலத்தில் நடந்த மாவட்டக் கழகத் தேர்தலில் பதிவான வாக்குகள், பல கட்சியினரும் பெற்ற வெற்றி தோல்விகள், செல்லாமற்போன வாக்குகள் இவை பற்றிய புள்ளி விவரங்கள் இப்போது கிடைத்துள்ளன.

மாநிலத்தில் உள்ள 13 மாவட்டங்களிலும் நடைபெற்ற தேர்தலில் மொத்தம் பதிவான வாக்குகள் 64,29,908. இவற்றில், காங்கிரஸ் கட்சிக்கு 29,55,567 வாக்குகள்; கம்யூனிஸ்டு கட்சிக்கு 8,26,941 வாக்குகளும், பி.-சோ. கட்சியினருக்கு 4,27,250 வாக்குகளும், சுயேச்சை அபேட்சகர்களுக்கு 12,16,534 வாக்குகளும் பதிவாகியுள்ளன.

மொத்தம் 5,55,098 வாக்குகள் செல்லாதவையென தீர்மானிக்கப்பட்டன.

13 மாவட்டங்களிலுமுள்ள மொத்த இடங்கள் 628 ஆகும்.

இவற்றில், காங்கிரஸ் கட்சி 480 இடங்களையும், கம்யூனிஸ்டுகள் 30 இடங்களையும், பி.-சோ. கட்சியினர் 12 இடங்களையும், இதரர்கள், சுயேச்சைகள் 103 இடங்கள் உள்பட 116 இடங்களையும் பெற்றனர்.

628 மொத்த இடங்களுக்கு காங்கிரஸ் 596 அபேட்சகர்களை நிறுத்தியது. சுமார் 10) பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கம்யூனிஸ்டுகள் 156 இடங்களில் போட்டியிட்டு 30 இடங்களைப் பிடித்தனர்.

மலபாரில் 18-ம், தென் கன்னடம், மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் இரண்டு வீதமும், திருநெல்வேலி, தென்னாற்காடு, கோவை, சேலம், வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஒன்று வீதமும், அந்த 30 இடங்கள் அவர்களுக்குக் கிடைத்தன.

தேர்தலில் பதிவான வாக்குகளில் ஏராளமானவை செல்லாதெனத் தீர்மானிக்கப்பட்டதை ஒட்டி, அரசாங்கம், தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகளை நீக்க ஆவன செய்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியினர் இரண்டு இடங்களில் மட்டும் போட்டியிட்டு இரண்டு இடங்களிலும் தோல்வி கண்டிருக்கின்றனர். அவர்கள் பெற்ற வாக்குகள் 4,389—மட்டுமே!

கம்யூனிஸ்டு கட்சியினரும், அவர்கள் ஆதரித்த ஆறு சுயேச்சைகளுமாகச் சேர்ந்து 4,46,955 வாக்குகள் பெற்றனர். இவர்களே தேர்தலில் அதிகமான வாக்குகள் பெற்றனர்.

கடந்த பொதுத் தேர்தலில் அவர்கள் பெற்ற 3,02,355 வாக்குகளைக் காட்டிலும் 1,44 460 வாக்குகள் அதிகம் பெற்றிருக்கின்றனர்.

மொத்தம் பதிவான வாக்குகள் 12,18,431 ஆகும்.

அவற்றில் செல்லாதவை எனத் தீர்மானிக்கப்பட்டது 50,804 வாக்குகளாகும்.

# ஆந்திர பி.-சோ. கட்சித் தலைவர் இராஜினமா!

பொதுச்செயலாளர் போக்கு பற்றி குற்றச்சாட்டு!

ஆந்திர பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் தலைவரான கே. சூரியநாராயணா தனது தலைமைப் பதவியை இராஜினமா செய்துவிட்டார்; இவர் இந்தியப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஆவார்.

ஆந்திர பிரஜா-சோஷலிஸ்டு கட்சியினர், அக்கட்சியின் பொதுச் செயலாளரான பி. வி. இராசு ஆகியோரின் போக்கு பிடிக்காத காரணத்தால்தான், இவர் இராஜினமா செய்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்று பி. வி. இராசு கூறியதும், அதன் பின்னர் வேறு மந்திரி சபை அமைத்தால் ஆதரவு தருவதாக மறுநாளே அவர் கூறியதும் தவறான போக்கு என்றும் சூர்ய நாராயணா கருதுகிறார்.

சட்டசபையிலுள்ள கட்சி உறுப்பினர்களில் எட்டு பேர் தங்கள் மனம் போனபடி பேசி, கட்சியின் கொள்கைகளை மாற்றிக் கொள்கிறார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

தனக்குத் தெரிவிக்காமலேயே பி. வி. இராசு, கட்சியின் நிர்வாகக் குழுவைக் கூட்டினார் என்றும், அக்கூட்டத்தில் பி.-சோ. கட்சியின் கொள்கையில் காணப்படும் வேற்றுமை பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்றும் அவர் மேலும் கூறினார்.

# போட்டி சங்கம் அமைக்கும் உரிமை சீனத் தொழிலாளருக்கு இல்லை!

கம்யூனிஸ்டு சீனா குறித்து டி. எஸ். ராமானுஜம் கருத்து

"கம்யூனிஸ்டு சீனாவில் உள்ள தொழிலாளர் சங்கங்கள் ஜனநாயக ரீதியாக இயங்கவில்லை. தொழிலாளர்களுக்கு போட்டி சங்கங்கள் அமைக்கிறஉரிமை இல்லை."

என்று இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் சார்பாக அண்மையில் சீனா சென்று திரும்பியுள்ள திரு. டி. எஸ். ராமானுஜம், தென் பகுதி ரயில்வே தொழிலாளர்கள் தனக்கு தந்த வரவேற்பின்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறினார்:—

"போக்குவரத்து வசதிகளைப் பொறுத்த மட்டில் சீனாவைக் காட்டிலும், இந்தியா எவ்வளவோ முன்னேறியுள்ளது. அங்கு போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. சாலைகள் சரிவர கவனிக்கப்படவில்லை.

ரயில் வசதிகள் கூட ஒரு குறிப்பிட்ட அளவு தான் உள்ளது; என்றாலும், ரயில்களில் நெருக்கடி இல்லாமலிருப்பதற்குக் காரணம், அங்கு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போக அனுமதி வாங்கவேண்டும் என்ற முறை இருக்கிறது.

இந்தியாவிலிருப்பதைப் போன்று சீனாவில் நீர்ப்பாசனத்திற்கான பெரிய அணைக்கட்டுகள் இல்லை.

விவசாயத் துறையில், சீனா மிக கண்டிப்பான நிலச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு நிலப் பிரபுத்துவத்தை ஒழித்துள்ளது.

மொத்தத்தில், கம்யூனிஸ்டுகள், பிறர் நம்பவேண்டுமென்று எதிர்பார்த்துக் கூறுகிற அளவு சீனா முன்னேறிவிடவில்லை."

# முசாதீக்கை மீண்டும் விசாரணை செய்யவும்

## மன்னரிடம் மகஜர் தருகிறார்கள்!

தெஹ்ரான் சர்க்காரை ஆதரிக்கும் பத்திரிகையான 'பார்மென்' என்னும் இதழ், இப்போது மூன்றாண்டு சிறை தண்டனை பெற்று சிறையில் இருக்கும் முன்னாள் பாரசீகப் பிரதமர் டாக்டர் முசாதீக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமென்று கோரியிருக்கிறது.

சட்ட விரோதமாக்கப்பட்ட கம்யூனிஸ்டு டூடே கட்சியுடன் அவருக்கு இருந்த தொடர்பு பற்றி பல சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றனவென்றும், இராணுவத்தில் இருந்த கம்யூனிஸ்டு தலைவர்களை விசாரணை செய்யும்போது இந்த சாட்சியங்கள் கிடைத்தனவென்றும், ஆகவே, முசாதீக் மீண்டும் விசாரணை செய்யப்பட வேண்டுமென்றும் கோரப்படுகிறது.

தனியாகச் சிறையில் உள்ள முசாதீக்கிடம் சில கேள்விகள் கேட்கப்படுமென்று அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

இராணுவத்தில் உள்ள 700 அதிகாரிகள் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் டூடே கட்சியின் அதிகாரிகள் ஒழிக்கப்பட்டுவிட்டனர் என்றும், ஆனால் அவர்களுக்குக் கொள்கை வகுத்துத் தந்தவர்கள் இன்னும் தூக்கிலிடப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்ற புதனன்று டாக்டர் பதேமி தூக்கிலிடப்படுவதற்கு முன்னால், இந்த மகஜர், மன்னர் ஷாவிற்கு அனுப்பப்பட்டதாம்.

## தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ்

தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அவர்களுக்கு 'இன்ஷ்யூரன்ஸ்' வசதி அளிக்கும் பிரச்சினையை ஆராய, ஒரு ஆய்வுக் குழு சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், சென்ற சில காலந் தொட்டு அந்தப் பிரச்சினை பற்றி ஆராய்ந்து வரும் அந்தக் குழுவின் அறிக்கையை சர்க்கார் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் மத்திய சர்க்கார் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் தெரிவித்திருக்கிறார்.

# மலபார் மாவட்டக் கழகத் தேர்தல்

விபரங்கள்

மலபார் மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 48—அங்கத்தினர்களில் 15 பேர்களே காங்கிரஸ் உறுப்பினர்கள்.

பழைய கழகத்தில், காங்கிரசுக்குப் பெரும்பான்மை இடங்கள் கிடைத்திருந்தன.

காங்கிரஸ் 45 இடங்களில் போட்டியிட்டது. காங்கிரஸ் கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 4,14,452. கடந்த பொதுத் தேர்தலில் மலபார் மாவட்டத்தில் காங்கிரஸ் 4,33,009 வாக்குகள் பெற்றிருந்தது.

மாவட்டத்தில், காங்கிரஸ் கட்சிக்கிருந்த செல்வாக்கு வெகுவாகக் கரைந்து விட்டது. இதற்குக் காரணம், விவசாயிகளிடமும், தொழிலாளர்களிடமும் காங்கிரஸ் கட்சி வேலை செய்யாததே என்று ஒருவர் கூறினாராம்.

இத்தேர்தலில் பி.–சோ. கட்சியினர் பெரும் தோல்வி பெற்றிருக்கின்றனர். 21 பேர்களை போட்டியிடச் செய்தது மட்டுமின்றி, சில சுயேச்சைகளையும் பி.–சோ கட்சியினர் ஆதரித்தனர்; ஆனால் அவர்கள் பெற்ற மொத்த வாக்குகள் 1,31,403 மட்டுமே!

கடந்த பொதுத் தேர்தலில், அவர்கள், பிரஜா கட்சியினர் 1,64,413 வாக்குகளும், சோஷலிஸ்டு கட்சியினர் 2,31,819 வாக்குகளும் ஆக மொத்தம் 3,96,232—வாக்குகள் பெற்றனர்.

முஸ்லிம் லீக் கட்சியினர் 17—இடங்களில் போட்டியிட்டு 8 இடங்களைப் பிடித்துள்ளனர் இவர்கள் மொத்தம் 1,65,610 வாக்குகள் பெற்றனர்.

ஜன சங் கட்சியினர் இரண்டு இடங்களில் போட்டியிட்டு இரண்டிலும் தோல்வி கண்டனர். அவர்களுக்குக் கிடைத்தது மொத்தம் 4,818 வாக்குகளே!

# விஞ்ஞானம் வளருகிறது

"கார்களுக்கு பொருத்தப்படும் டயர்கள், ஒரு லட்சம் மைல் ஓடும் வரை உபயோகிக்கத்தக்கனவாகவும், அக்காலத்தில் 'பஞ்சர்' விபத்துக்காளாகாதவாரும் இன்னும் மூன்று அல்லது நான்காண்டுக் காலத்திற்குள் தயாரிக்கப்படக் கூடும்," என, அமெரிக்க ரசாயனக் கழகத்தின் தலைவரான டாக்டர் ஹாரி பிஷர் என்பவர் அறிவித்துள்ளார்.

கார்களில் ஆயுட் காலமளவு உபயோகிக்கக்கூடிய இந்த டயர்கள் 'சிந்தெடிக்' ரப்பரால் தயாரிக்கப்படுமாம். அவை கார் நிறத்துக்கொப்ப எந்த ரக நிறத்திலும் தயாரிக்கப்படவும் முடியுமாம்.

# ஜாகீர்தார்கள்—ஒரு எச்சரிக்கை!

"சிந்து நாட்டிலுள்ள ஜாகீர்தார்கள், தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்த விதிகளை அலட்சியப் படுத்துவதாயிருந்தால், அவர்கள், தங்களுடைய ஜாகீர் நிலங்களை இழக்கவேண்டி வரும்," என்று அந்நாட்டு ரெவின்யூ இலாகா மந்திரி எச்சரிக்கை செய்துள்ளார்.

மேலும், அந்த ஜாகீர்தார்களின் கீழ் வாழ்க்கை நடத்தும் சுமார் 25 இலட்சம் நிலமற்ற விவசாயிகளின் நிலையை அபிவிருத்தி செய்ய சர்க்கார் முதலிடம் அளித்துள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இந்தியத் தபால் போக்குவரத்து மார்க்கங்களில், சுமார் 1,86,961 மைல் சர்வீஸ் மார்க்கங்கள்; சுமார் 20,436 மைல் விமானமார்க்கங்கள்.

1953-ல், இந்தியாவிலிருந்து சுமார் 12 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 23,000டன் முந்திரிக் கொட்டை ஏற்றுமதியாயிற்று.

# மண உடைகளைத் தாங்களே நெய்துகொள்ளும் நங்கையர்

## கல்லூரிப் பெண்களும் இப்பரம்பரை வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர்

அசாம் மகளிரின் நெசவுத் திறம்

தன்னுடைய மண ஆடைகளைத் தானே நெய்துகொள்ளத் தவறும் ஒருத்திக்குத் திருமணம் நிகழ்வது என்பது முடியாத காரியமாகும். படித்த, படிக்காத நங்கையர் அனைவரிடத்திலும் இந்த நெசவுப் பழக்கம் இருந்து வருகிறது.

கௌஹாதி கல்லூரியில் படித்துவரும் பெண் ஒருத்தி, தனது கோடை விடுமுறையின்போது, தனது சேலைகளைத் தானே நெய்து கொண்டாள்.

அசாம் மாநிலத்தில் ஒவ்வொரு விட்டிலும் சொந்தத் தறி ஏற்பாடு இருக்கிறது. தங்களுடைய உடைத் தேவைகளை, அங்குள்ள பெண்கள் தாங்களே நெய்து கொள்வது வழக்கம்.

இந்த உண்மைகளை கைநெசவு பற்றி ஆராய்ந்து அறிந்து, வெளியிடப் பெற்றுள்ள கனுங்கோ அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

தங்களுக்குத் தேவைப்படும் சில ஆடை இனங்களை, தங்களுடைய மனைவி—சகோதரிகளே, சொந்தத்தில் நெய்துகொள்ளுவது வழக்கம் என்று அதிகாரிகள், கனுங்கோ குழுவிடம் கூறியுள்ளனர். பெண்களின் துணிவகைகளைப் பொறுத்த வரையில், அசாமில் குடும்பத்தின் சுயதேவை பூர்த்தியே நோக்கமாக இருப்பதால், அங்கு வியாபாரத்திற்கென கைநெசவு மேற்கொள்ளப்படுவதில்லை என்று குழு குறிப்பிட்டிருக்கிறது.

மணிபுரியில், கைநெசவு, இதே போக்கைத்தான் ஒத்துஇருக்கிறது. பருத்தியாடையும் பட்டாடையும் குடும்பத் தேவைக்காகவே நெசவு செய்யப்படுகின்றன.

அசாமிலுள்ள கரீம்சன்ஜ், சில்க்கார் பகுதிகள், பட்டு, பருத்தி நெசவில் சிறப்புப் பெற்று விளங்குகின்றன.

# சென்னை சர்க்கார் குடிநீர் திட்டங்கள்

## அடுத்த ஆண்டில் ரூ. 620 லட்சம் செலவிடப்படும்

மத்திய சர்க்கார் ரூபாய் இரண்டரை கோடி தருகிறது

**1955—56-ம் ஆண்டுடன் முடிவடையும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை சர்க்கார் ரூ. 620 லட்சம் செலவிட்டு பல்வேறு நகர சபைகளிலும் குடிநீர்த் திட்டங்களையும், சாக்கடைத் திட்டங்களையும் நிறைவேற்ற இருக்கிறார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**1954—55-ம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ. 45 லட்சமும், 1955—56-ம் ஆண்டில் ரூ. 97 லட்சமும் செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.**

**செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கும் ரூ. 620 லட்சத்தில், இந்திய சர்க்கார் ரூ. 250 லட்சம் ஏற்றுக்கொள்ளும்.**

**சென்னை நகர சபையின் குடிநீர் திட்டங்களுக்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.**

இதுபற்றிய முடிவுகள், சென்னை சர்க்கார் காரியாலயத்தில் சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டியின் தலைமையில் நடைபெற்ற அதிகாரிகள், என்ஜினீயர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

சர்க்கார் இன்னும் பதினைந்து மாதங்களில் நிறைவேற்ற இருக்கும் திட்டங்கள் பின்வருமாறு :—

சேலம்-மேட்டூர்: ரூ. 36 லட்சம்.
கும்பகோணம் (முன்றுவது கட்டம்): ரூ. 16 லட்சம்.
கோழிக்கோடு: ரூ. 4.59 லட்சம்.
கோவை (முதல் கட்டம்): ரூ. 42.69 லட்சம்; அடுத்த கட்டம்: 13.42 லட்சம்.
திருச்சி: ரூ. 11.35 லட்சம்.
மதுரை: ரூ. 30 லட்சம்.
பாளையங்கோட்டை: ரூ. 28.18 லட்சம்.
ஸ்ரீவில்லிப்புத்தூர்: ரூ. 15.70 லட்சம்.
திருநெல்வேலி: ரூ. 40 லட்சம்.
மாயூரம் (முதல் கட்டம்: ரூ. 17 ஆயிரம்.
தேவகோட்டை: ரூ. 1 லட்சம்.
பாலக்காடு: ரூ. 35 லட்சம்.
தாராபுரம்: ரூ. 1 லட்சம்.
மேலப்பாளையம்: ரூ. 13.26 லட்சம்.
திண்டிவனம்: ரூ. 25 ஆயிரம்.
கடலூர்: ரூ. 26.34 லட்சம்.
திண்டுக்கல்: ரூ. 87 லட்சம்.
திருப்பூர்: ரூ. 92 லட்சம்.

சாக்கடைத் திட்டங்கள் பற்றிய உத்தேசத் திட்டங்கள் :—

நாகை: ரூ. 7.04 லட்சம்.
ஸ்ரீரங்கம்: ரூ. 4.77 லட்சம்.
மதுரை: ரூ. 9.68 லட்சம்.
திருச்சி: ரூ. 2.94 லட்சம்.
கும்பகோணம்: ரூ. 18.70 லட்சம்.

## விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டம்

சென்னை சர்க்காரின் விவசாயக் கடன் உதவிச் சட்டம், வருகின்ற பிப்ரவரி திங்களில் காலாவதியாகின்றபோது, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது பற்றி சென்னை சர்க்கார் சீக்கிரமே முடிவு செய்யும் என்று தெரிகிறது.

கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை காலவரையறையின்றி நீடித்துக்கொண்டே போவதில் பொருளில்லையென்றும், கடன்களை ஒழிப்பதானல் இத்தகைய நடவடிக்கைகளில் பொருள் உண்டென்றும், என்றாலும் கடன்களை ஒழிக்கும் உத்தேசம் கிடையாது என்றும் முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டுள்ளார்.

## பம்பாய் மாநிலத்திற்கு ரூ. 3 கோடி கடன்

### மத்திய அரசாங்கம் உதவும்

பம்பாய் அரசாங்கம் திட்டமிருந்த 10 மின்சாரத் திட்டங்களை மத்திய அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என்றும், இத்திட்டங்களை நிறைவேற்ற கடனுக ரூ. 2.84 கோடி தரவும் முன்வந்துள்ளதெனவும். தெரிகிறது.

கரையாளர் மேற்கொள்ளும்

## நடவடிக்கை!

திருச்சி நகரசபைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, தாம் விடுத்த அறிக்கைக்கு, எதிராக 12 காங்கிரஸ் உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்குச் செய்ததால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, குறிப்பிட்டு அந்த 12 பேரும் 4 ஆண்டுக் காலத்திற்கு காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கி வைக்கப்பட வேண்டு (சஸ்பெண்டு) மென்று த. நா. கா. க. தலைவர் எல். எஸ். கரையாளர் கேட்டுக் கொண்டுள்ளாராம். இதுபற்றி த. நா. கா. க. நிர்வாகக் குழு முடிவு செய்யும் என்று கூறப்படுகிறது.

## ஆச்சாரியாருக்குப் புதிய வேலை

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியரின் ஒப்பற்ற காவியமான 'மாக்பெத்' என்ற நாடகத்தை தமிழில் மொழி பெயர்த்துத் தருமாறு தமிழ் சாகித்திய கழகத்தின் ஆலோசனைக் குழுவினர், திரு. இராஜகோபாலாச்சாரியாரைக் கேட்டுக் கொண்டுள்ளனராம்.

## 'குடும்பத் திட்டம்' பறிமுதல்

'குடும்பத் திட்டம்' என்ற தமிழ் பிரசுரத்தையும், அதன் ஆங்கிலப் பதிப்பு இவற்றின் எல்லாப் பிரதிகளையும், ஆட்சேபனைக்குரிய விஷயங்கள் கொண்டது என்று கூறி, சென்னை சர்க்கார் பறிமுதல் செய்துள்ளனர் எனத் தெரிகிறது.

## கழகக் கூட்டம்

★

கணியூர்

புதூர் மடத்தில்
கல்லக்குடி வெற்றி விழாக் கூட்டம்
**20—11—54 மாலை 7 மணிக்கு**
பேசுவோர் :
எஸ். முத்து
கே. கோபால்சாமி
எம். கணபதி

**இலங்கை—சேதவத்தை**
**தி.மு. கழக முதலாண்டு விழா**

21—11—54 மாலை 4 மணிக்கு மருதானை, ஸ்கின்னர்ஸ் ரோடு அரசினர் மத்திய பாடசாலை மண்டபத்தில், மலேயா-கணபதி அரங்கில், தோழர் இரா. அதி. மணி தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மற்றும் இயக்க முன்னணி பேச்சாளர்கள் கலந்துகொள்வர்.

**பொதுக்கூட்டம்**

20—11—54 மாலை 6-30 மணிக்கு, பொன்னேரி வட்ட ஆரணி திருக்குறள் முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம், பெருமாள் கோயில் அருகில், தோழர் கு. பாண்டியன் தலைமையில் நடைபெறும். 'உழைப்போரும்-வாழ்வோரும்' என்ற தலைப்பில் தோழர்கள் கோ. இராஜ ஜெயகரன், குப்புசாமி, ஜி. ஏ. இராமதாஸ், க. முனுசாமி ஆகியோர் பேசுவர்.

**சென்னை 8-வது வட்ட தி.மு. கழக உறுப்பினர்கட்கு**

20—11—54 மாலை 6 மணிக்கு சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, குப்பையர் தெரு, எண் 1 இல்லத்தில் நடைபெற இருக்கும் சென்னை 8-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில் கழக நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு வருகைதர வேண்டுகின்றேன் என சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

## புதிய மேயர்

திரு. எம். ஏ. சிதம்பரம் காங்கிரஸ் அபேட்சகர்

சென்னை நகரசபைக்கு வரும் ஆண்டிற்கு மேயர் தேர்தல் நவம்பர் 23-ந் தேதி நடைபெறப் போகிறதல்லவா?

நகரசபை காங்கிரஸ் கட்சியினர் தென்இந்திய வர்த்தக சபைத் தலைவரான திரு. எம். ஏ. சிதம்பரம் செட்டியாரை காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்று தெரிகிறது.

# நாடு கடத்தப்பட்ட புகாண்டா மன்னர்

## மீண்டும் மன்றமேறக் கோரிக்கை

**நாடு கடத்தப்பட்ட புகாண்டா நாட்டின் முடிசூசா மன்னரை மீண்டும் உடனடியாக அரியாசனத்தில் அமர்த்த வேண்டும் என்றும், அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அக்கரை இல்லை என்றும், புகாண்டா தேசியக் காங்கிரஸ் இன்று கோரியுள்ளதாகத் தெரிகிறது. புகாண்டாவிலேயே மிகச் செல்வாக்குப் பெற்ற அரசியல் நிறுவனம், இந்தத் தேசிய காங்கிரசாகும்.**

புகாண்டா பாராளுமன்றம் இன்று தனது மன்னர் (கபாகா) முடிசூசா மீது விசுவாசம் தெரிவித்திருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார், புகாண்டாவின் அரசியல் சட்டத்திற்கென விதிக்கும் முறைகளை ஏற்றுக்கொண்டால், இப்போது நாட்டிற்கு வெளியேயிருக்கும் புகாண்டாவின் மன்னர், மீண்டும் நாட்டிற்கு வந்து பதவி ஏற்க அனுமதிக்கப்படுவார் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இதனை அடுத்துதான், பாராளுமன்றம், மன்னர் மீது தனது விசுவாசத்தைப் புதுப்பித்து இருக்கிறது.

இப்போது புகாண்டா மன்னர், லண்டனில், சர்க்காரிடம் ஆண்டு தோறும் 8,000 பவுன்கள் அலவன்ஸ் பெற்று குடியிருக்கிறார்.

உகாண்டாவின் பாதுகாப்புப் பிரதேசத்தில் புகாண்டா ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்பது, பிரிட்டிஷ் சர்க்காரின் வெள்ளை யறிக்கை விதித்துள்ள நிபந்தனைகளில் ஒன்றாகும். அடுத்து, புகாண்டா மன்னரைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதும் மற்றொரு நிபந்தனையாகும்.

இந்த அரசியல் சீர்திருத்தம் பற்றி புகாண்டாவின் பிரிட்டிஷ் கவர்னர் பேசிய கூட்டத்தில், புகாண்டா மக்கள் கலவரம் செய்து விட்டனர்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டு மன்னர் நாடு திரும்ப அனுமதிக்கப்படுவார் என்ற கவர்னர் கூறியதை கூடி நின்று கேட்ட மக்கள் தவறுகப் புரிந்து கொண்டார்கள்; ஆகவே, மேற்கொண்டு கவர்னர் பேச முடியாதவாறு கூச்சலிட்டு ஆரவாரம் செய்தார்கள்; கவர்னரும், பேச்சை நிறுத்திவிட்டார். இச்செய்கைக்காக கவர்னரிடம் மன்னிப்புக் கேட்க புகாண்டா பாராளுமன்றம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் விதித்துள்ள நிபந்தனைகளை ஆராயப் பாராளுமன்றம் தீர்மானித்தது.

புகாண்டாவின் முன்னாள் பிரதமர் ஒருவர் புகாண்டா பாராளுமன்றம் பிரிட்டிஷாரின் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளாது என்றும், ஆகவே மன்னர் நாடு திரும்புவது அரிது என்றும் கூறியுள்ளார்.

கவர்னர் பேசிய தரபாம் போட்டிருந்த கொட்டகைக்குள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிகிறது.

கவர்னரின் பேச்சைக் கேட்டு தவறான முறையில் கலகம் செய்த மக்கள், ஐரோப்பியர்கள், ஆசிய மக்கள் ஆகியோரின் மீது கற்களை வீசினர்களாம்.

## மன்னரின் மகிழ்ச்சி

லண்டன், நவ. 17—

பிரிட்டிஷ் சர்க்காரின், புகாண்டா வெள்ளை அறிக்கை பற்றி தன்னுடைய கருத்து எதையும் தெரிவிக்க மன்னர் மறுத்து விட்டார். தான் அந்த அறிக்கையை ஆராய்ந்து படிக்கவில்லை என்றார்.

ஆனல், அவர், தன்மீது புகாண்டா மக்கள் காட்டும் அன்பைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்ததுடன், "என் எதிர்காலம் புகாண்டாவின் பாராளுமன்றத்திடம் இருக்கிறது," என்று கூறினார்.

## அணுகுண்டு பரிசோதனை

சோதனை காலத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்!

ஜப்பானிய விஞ்ஞானிகள் கோரிக்கை

அமெரிக்காவும்-ரஷ்யாவும் தங்கள் அணுகுண்டு பரிசோதனைகளை ஒத்திவைக்க வேண்டுமென ஜப்பானிய விஞ்ஞானிகள் கோரியுள்ளனர். ஏனெனில், அப்போது தான் இப்போது வீசும் காற்றில் அந்த அணுகுண்டு சோதனைகளின் விளைவாக, மின்கதிரியக்க சக்தி கலந்துவிடாமல் இருக்குமெனக் கூறுகின்றனர்.

"அணுகுண்டு பரிசோதனையை அடியோடு கைவிடாவிடினும், பரிசோதனை நடத்தும் காலத்தை சற்று மாற்றிக்கொள்ளவேண்டும்," என்று அவர்கள் கேட்டுள்ளனர்.

பத்திரிகை யொன்றுக்குப் பேட்டியளித்த அவர்கள், "இளவேனிற் காலத்தில் தெற்குப் பசிபிக்கிலிருந்தும், இலையுதிர்காலம், மாரி காலம் ஆகிய நாட்களில் சைபீரியாவிலிருந்தும், புயற்காற்று அடிப்பதாகவும், அந்தக் காலங்களில் முறையே அமெரிக்கரும், ரஷ்யர்களும் 'அணுகுண்டு பரிசோதனை நடத்தினல், காற்றில் மின்கதிரியக்க சக்தி கலந்து விடுகிறது," என்றும் கூறியுள்ளனர் எனத் தெரிகிறது.

## முன்னாள் மரமேறிகளின் அறப்போர்!

நிறுத்திவைக்க முடிவு

ஆந்திராவில் நடைபெறும் முன்னாள் மரமேறிகளின் அறப்போர் இயக்கத்தை நிறுத்தி வைப்பதென முடிவாகியுள்ளது.

ஆந்திர கிருஷிக் லோக் கட்சி அலுவலகத்தில் ஏ. வெங்கடபதியின் தலைமையில் நடைபெற்ற இயக்கத்தின் செயற்குழுவில் மேற்கண்ட முடிவெடுக்கப்பட்டதாம்.

கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் ஒன்றின் மூலம், கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்துள்ள அறப்போர் வீரர்களை எல்லாம் விடுதலை செய்யுமாறு அவர்கள் கவர்னரைக் கோரியுள்ளனர் எனத் தெரிகிறது.

## தேசிய நாடக விழா:

தேசிய நாடக விழாவினை நவம்பர் 22-ந் தேதியன்று குடியரசுத் தலைவர் ராசேந்திர பிரசாத் புதுடில்லியில் துவக்கி வைப்பார் எனத் தெரிகிறது.

'சாகுந்தலம்' என்ற சமமொழி நாடகத்துடன் விழா துவங்குமாம்.

தமிழ் நாட்டிலிருந்து 'தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 'கல்வி' கிருஷ்ணமூர்த்தி அய்யரின் 'சிவகாமியின் சபதம்' கிருபா அமெச்சூர் நடிகர்களால் நவம்பர் 27-ந் தேதி நடித்துக் காட்டப்படும்.

மத்திய டிராக்டர் ஸ்தாபனம் 1953—54-ல் 2,80,000 ஏகரா நிலத்தைத் திருத்திப் பண்படுத்திய தன் மூலம் தன் சாதனையில் உச்ச அளவை எட்டியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

# கடல்கடந்த சீக்கியர்களின் மதவெறி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லும், அதன் பலனை, 1956-ல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் வரையில் அவர்கள் அனுபவிக்கப் போவது கிடையாது. ஆனல், இப்பொழுதுள்ள சட்டசபையில் சீக்கியர்களிலிருந்து ஒருவரைப் பிரதிநிதியாக நியமிக்க வேண்டுமென கவர்னரை நெருக்குகிறார்கள்.

சீக்கியர்களின் இக்கோரிக்கையை, அங்குள்ள ஐரோப்பியர்கள் வரவேற்பதாக இல்லை; எதிர்க்கவும் செய்கின்றனர்.

தனித் தேர்தல் முறையை, தத்துவ ரீதியில் ஐரோப்பியர்கள் வெறுக்கவில்லை. ஆனல், சில ஆண்டுகளுக்கு முன்னர் முஸ்லீம்களுக்கு தனித்தேர்தல் உரிமை அளிக்கப்பட்டதின் காரணமாக, கெனியா அமைச்சர் குழுவில் இரண்டு ஆசியர்களுக்கு இடம்தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதுபோல், சீக்கியர் கோரிக்கையும் ஒப்புக்கொள்ளப்பட்டால், மேலும் ஒரு ஆசியாக்காரருக்கு அமைச்சர்குழுவில் இடம்தரவேண்டிய கட்டாயம் உண்டாகிவிடுமோ என்ற அச்சத்தினல்தான், சீக்கியர் கோரும் தனித் தேர்தல் முறையை அந்த ஐரோப்பியர்கள் எதிர்க்கின்றனர்.

சட்டசபையில் தனிப் பிரதிநிதித்துவ முறை சீக்கியர்களுக்கும் வழங்கப்பட்டால், அவர்கள் அமைச்சர் குழுவிலும் இடம்தர வேண்டுமெனக் கிளர்ச்சி செய்யமுனைவர்; எனவே, அவர்கள் கோரும் தனித் தேர்தல் ஏற்பாட்டை, முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டுமென ஐரோப்பியர்கள் தீர்மானித்துள்ளனர்.

கெனியா இந்தியக் காங்கிரசிற்கு சீக்கியர் கோரிக்கை பெரிய மண்டை இடியாக இருந்து வருகிறது. மேற்படி காங்கிரசின் தலைவர் ஒரு சீக்கியராக இருந்த போதிலும், சீக்கியரின் பிடிவாதத்தை மாற்றுவதில் வெற்றி கிடைக்குமா என்பதில் நிச்சயமில்லாமல் இருக்கிறது.